
நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
அம்பிகா ஜுவலர்ஸ்
77. செட்டியார் தெரு கொழும்பு-11.
தொலைபேசி 422839. 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6554 1990 ஏப்ரல் 2 திங்கட்கிழமை ★ ★ ★ தினபதி



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO. 11.
Phone: 422839 434238


ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டோம்

# ஜனநாயகவழியில் தீர்வு இல்லையேல் மீண்டும் போராட்டம்

## பிரபாகரன் யாழ். நகரில் பத்திரிகையாளர்களிடம் கூறுகிறார்

### வடக்கு கிழக்கில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கு ஜனாதிபதிக்கு நன்றி



வேலுப்பிள்ளை பிரபாகரன்

கொழும்பு, ஏப்ரல் 1

தமிழ் பேசும் மக்கள் பிரச்சினைகளின்றி பூரண பாதுகாப்புடன் சுதந்திரமாக வாழக்கூடிய நிலை ஏற்படும் வரை ஆயுதங்களைக் கீழே வைக்கமாட்டோம். ஜனநாயக வழியில் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்வோம். தீர்வு ஏற்படாவிட்டால் மீண்டும் போராட்டத்தை ஆரம்பிப்போம்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் ...

அந்த மாநாட்டில் ஜனாதிபதி திரு பிரேமதாச வடக்கு கிழக்கில் (இந்தியப் ...

அவர் ... றோம்; உண்மையாகக் கண்டிக்கிறோம்-

இந்திய அரசாங்கம் இப் ...

## இராணுவத்தில் களையெடுப்பு

கொழும்பு ஏப் 1

இராணுவத்தில் முறைகேடான விடயங்களில் ஈடுபடும் வீரர்களைக் களைந்து மக்கள் மனதில் இராணுவத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உயர் இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது-

சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் ஐரையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இதற்கான உத்தரவை பிறப்பித்தார்-

இராணுவம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது-

பிரிகேடியர் கமாண்டர் ஒருவரின் கீழ் ஒவ்வொரு மாகாணத்திலும் படைப் பிரிவு ஒன்று நிறுத்தி வைக்கப்படும்- எற்கனவே சில மாகாண படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு விட்டன என்றும் ஜெனரல் ரணதுங்க கூறினார்-

கடந்த காலத்தில் இராணுவத்தினர் குற்றச் செயல்கள் உட்பட பல முறைகேடான சம்பவங்களில் ஈடுபட்டனர்- ஆகவே இச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களை களைந்து இராணுவத்தை ஒழுக்கமும் கட்டுப்பாடும் கொண்டதாக அமைக்க வேண்டும் என்று அவர் மாநாட்டில் மேலும் சொன்னார்-

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 25 க்கும் அதிகமான இராணுவ வீரர்கள் பல்வேறு குற்றச் செயல்கள் காரணமாக பொலீஸாரால் இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்- இவர்களில் சிலர் இராணுவ அதிகாரிகளாவர்- திருட்டு- பணம் பறிப்பு- கொலை- மான பங்கம் ஆகிய குற்றச் செயல்கள் தொடர்பாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்- (உ-032)

## எயிட்ஸ் பெண்மணி ஆண் குழந்தை பெற்றார்

கொழும்பு, ஏப் 1

எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டுள்ள கர்ப்பிணி நேற்றுக் காலை 6-25 மணிக்கு ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். குழந்தையின் எடை 6 இறாத்தல் ஆகும்.

கொழும்பு காசல் வீதி பிரசவ ஆஸ்பத்திரியில் இந்தக் குழந்தை பிறந்தது-

இலங்கையில் எயிட்ஸ் நோய்க்குள்ளான தாய் ஒருவர் குழந்தை ஒன்றை பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

தாயும், குழந்தையும் ஒரே அறையில் இருக்கின்றனர்.

சுகப் பிரசவமே நடந்தது.

சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன.

ஆஸ்பத்திரி அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இப்பெண் கடந்த மார்ச் 19 ஆம் திகதி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

## பிரதமர் இன்று பலப்பிட்டியில்

கொழும்பு, ஏப் 1.

பிரதமர் திரு டீ பீ விஜேதுங்க இன்று 2ஆம் திகதி பலப்பிட்டிக்கு விஜயம் செய்கிறார்.

இத்தொகுதியில் 750 பேருக்கு தமபக் கயிறு கைத்தொழிலுக்காக தலா 3000 ரூபா கடன் உதவியையும், கைகளால் இயக் ...

வங்காள தேசத்தில்

## நோன்பு நேரத்தில் உணவு உண்ட 153 பேர் கைது

மேற்கண்டவாறு தமிழ்ழ விடு தலைப் புலிகள் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ் நகரில் பத்திரிகையாளர்க ளிடம் கூறினார்—

சுமார் இரண்டரை வருடங்க ளுக்குப் பின்னர் திரு பிரபாகரன் நேற்று முதன் முறையாக வெளியில் வந்த நல்லூரில் பத்திரிகையாளர் மாநாடு நடத்தி னார்—

அந்த ... ஜனாதிபதி திரு பிரேமதாச வடக்கு கிழக்கில் (இந்தியப் படையை வெளியேற்றி) நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியதற் காக நன்றி தெரிவித்தார்—

நாங்கள் இந்திய அரசாங்கத் துக்கோ, அன்றி இந்திய மக்க ளுக்கோ எதிரானவர்கள் அல் லர்— இந்தியப் படை வடக்கு கிழக்கு பகுதிகளில் செய்த கொடுமைகளையே எதிர்க்கி றோம்—

இந்திய அரசாங்கம் இப் போதாவது ஒன்றை உணர வேண்டும்— புலிகளை இராணுவ ரீதியாகவோ அரசியல் ரீதி

(2ஆம் பக்கம் பார்க்க)

ஒக்காக தலா 3000 ரூபா கடன் உதவியையும், கைகளால் இயக் கும் உபகரணங்களையும் பிரத மர் வழங்குவார்.

மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் இது வழங்கப்படும்.

டாக்கா, ஏப் 1

நோன்பு நேரத்தில் பகி ரங்கமாக உணவு உண்டார் கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 153 பேரை வங்காள தேசப் பொலீஸார் கைது செய்திருக்கிறார்கள்.

இத்தகவலை உத்தியோக பூர்வ வட்டாரங்கள் கடந்த சனிக்கிழமை தெரிவித்தன.

சட்ட விரோதமாக இயங்கிய உணவுச் சாலைகளில் வைத்து இவர்கள் சுற்றி வளைத்து கைது செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் 29ஆம் திகதி ஆரம்பமான ரமழான் காலத்தில் பகிரங்கமாக உணவு உண்பதும் குடிபானங்களை அருந்துவதும் அரசினால் தடை செய்யப்பட்டி ருக்கிறது.

வங்காளதேசத்தில் 1988இல் இஸ்லாம் அரசு மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கி றது. (ண)

... கப்பட்டார்.

அங்கு அவர் தனியான அறை யில் 11 நாட்களைக் கழித்தார்.

மார்ச் 19ஆம் திகதி முதல் இப்பெண்ணின் கணவரும் ஆஸ் பத்திரியிலேயே மனைவியுடன் தங்கி இருந்தார்.

பிறந்த குழந்தைக்குத் தாய்ப் பால் ஊட்டுவது, இடைநிறுத்தப் பட்டுள்ளது.

புட்டிப்பால் கொடுக்கப்படுகி றது.

தாயும் குழந்தையும் இன்னும்

(2ஆம் பக்கம் பார்க்க)

# தேயிலை பேரவை அமைக்கப்படும்

கொழும்பு ஏப் 1

தேயிலை பயிர் செய்கைக் காக நிலத்தை பண்படுத்து தல் முதல் தேயிலையை ஏற்று மதி செய்தல் வரையிலான சகல பணிகள் தொடர்பாக வும் பெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சர் அல்லது சம்பந்தப்பட்ட வேறு அமைச் சருக்கு ஆலோசனை வழங்கு வதற்காக தேயிலைப் பேரவையொன்று அமைக் கப்படுகிறது—

இதற்காக தேயிலைச் சபை சட்டம் திருத்தப்படவிருக் கிறது—

இந்த சட்டத் திருத்தம் சட்ட வரைஞரால் தற்போது வரை யப்பட்டுள்ளது—

சட்ட வரைவு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படும்—

தேயிலைப் பேரவையில் 20 பேர் அங்கம் வகிப்பர்—

அவர்களைச் சம்பந்தப்பட்ட அமைச்சரே நியமிப்பார்—

(ற)

## சோமண்ணை



சரியாகக் களை பிடுங்கினால் எத்தினை பேர் மிஞ்சுவினமோ தெரியாது பாருங்கோ.

## சண்டையில் பிரமா அருந்தப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

சண்டையில் தாம் அருந் தப்பு தப்பியது பற்றி பிரபா கரன் பத்திரிகையாளர் மாநா ட்டில் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது—

இந்தியப் படையுடன் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் நடந்த மோதலின் போது நேருக்கு நேர் மோத வேண்டிய பல சந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்

(2ஆம் பக்கம் பார்க்க)

## யானை தாக்கி பொலீஸார் ஒருவர் மரணமானார்

கொழும்பு ஏப் 1

யானை தாக்கியதால் மைக் கல் குணதிலக்கா என்ற பொலீஸ்காரர் ஒருவர் மரணமானார்—

இச் சம்பவம் கடந்த சனிக் கிழமை இரவு அரங்கல பொலீஸ் வட்டாரத்தைச் சேர் ந்த ஹபரவ காட்டுப் பகுதியில் நிகழ்ந்தது—

பொலீஸாரின் தேடுதல் நட வடிக்கையின் போதே இச்சம் பவம் நிகழ்ந்திருக்கிறது—

(ண—007)

## ஸ்ரீ. ல. சு. கட்சி 4ஆம் திகதி சபைக்கு செல்லுமா?

### நாளை தீர்மானிக்கப்படும்

கொழும்பு ஏப் 1

நாடாளுமன்றத்தின் இரண் டாவது கூட்டத் தொடர் ஆரம்பித்து வைக்கப்படும் எதிர்வரும் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு செல் வதா இல்லையா என்பதை ஸ்ரீ ல சு க நாளை தீர்மானிக் கும்—

ஸ்ரீ ல சு க கொழும்பு மாவ ட்ட எம் பி திரு ஸ்டான்லி திலகரத்ன இதனைத் தெரிவித் தார்—

நாடாளுமன்றக் கட்டிடத்தில் மர்ஹூம் அப்துல் ரஹ்மானின் படம் சம்பிரதாயபூர்வமாக திற ந்து வைக்கப்பட்ட வைபவத்தின் போது ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச ஆற்றிய உரை மீது

(2ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு முகாம்களிலுள்ள

# தடுப்புக் கைதிகள் மீதான விசாரணைகள் துரிதமாக்கப்படும்

கொழும்பு ஏப் 1

பாதுகாப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 14000 சந்தேக நபர்கள் மீதான விசாரணைகள் துரிதப் படுத்தப்படும். விசாரணை அறிக்கை உடனடியாக சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும்—

பொலீஸ் மா அதிபர் திரு ஏர்னஸ்ட் பெரேரா இதற்கான உத்தரவை சகல பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கும் விடுத்திருக் கிறார்—

தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கைதாகி முகாம் களில் வைக்கப்பட்டுள்ளவர் களுள் 9000 பேர் கைது செய்யப் பட்டவர்களாவர்—

5000 பேர் சுய விருப்பத்தின் பேரில் பாதுகாப்புப் பிரிவினரி டம் சரண் அடைந்தவர்களாவர்—

சிறிய குற்றங்களை இழைத்த வர்கள் என்று விசாரணைகளின் போது தெரிய வருவோரை நிபந் தனை உடன் விடுவிக்கலாம் என

(2ஆம் பக்கம் பார்க்க)

## 17 வயது மாணவியின் சிதைந்த சடலம்

கொழும்பு ஏப் 1

மானபங்கப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள தாக சந்தேகிக்கப்படும் 17 வயது மாணவியொருத்தியின் சிதைந்த உடல் அப்புத்தளை ஆற்றோரமாக கண்டெடுக் கப்பட்டது—

இம் மாணவி பாடசாலை யில் இருந்து வீடு திரும்பிக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | | |
|---|---|---|
| ஸஹ்ர் முடிவு | — | 4–34 |
| ஸுபஹ் | — | 4–49 |
| சூரிய உதயம் | — | 6–09 |
| லுஹர் | — | 12–20 |
| அஸர் | — | 3–22 |
| மஃரிபு | — | 6–21 |
| இஷா | — | 7–41 |

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# 1½ லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு

## கைத்தொழில் அமைச்சு திட்டம்

கொழும்பு ஏப் 1

1,50,000 யுவதிகளுக்கும், இளைஞர்களுக்கும் புதிதாகத் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தனியார் துறையில் பாரிய அளவில் கைத்தொழில் நடவடிக்கைகளை முன்னேற்றி எதிர்வரும் இரு வருடங்களுக்குள் இத்தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுப்பது என கைத்தொழில் அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

இவ்வருடத்தில் 50,000 பேருக்கும், 1991ஆம் ஆண்டின் இறுதி அளவில் 1 லட்சம் பேருக்கும் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இப்புதிய திட்டத்தின் கீழ் இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஜூன் 30ஆம் திகதி வரைக்குமான காலத்தில் நிதியை முதலீடு செய்து ஆரம்பிக்கப்படும் கைத்தொழில்களுக்கு 5 வருட காலம் எவ்வித வரியையும் அறவிடுவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பாரிய பல தனியார் நிறுவனங்கள் பெருந்தொகை லாபத்தைச் சம்பாதித்திருக்கின்றன.

அந்த நிறுவனங்கள் இந்த நிதியைப் புதிய கைத்தொழில்களில் முதலீடு செய்வதானால் அவற்றுக்கும் வரிச் சலுகை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சின் செயலாளர் கூறினார். (ண–007)

### 17 வயது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த போது அடையாளம் காணப்படாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் மானபங்கப்படுத்தப்பட்ட அவரது சிதைந்த உடல் அப்புத்தளை கொஸ்கமையைச் சேர்ந்த ஆற்றோரமாக கண்டெடுக்கப்பட்டது.

இச் சடலத்தின் கழுத்து மற்றும் கைகளை மிருகங்கள் கடித்துக் குதறியிருப்பதால் மரணத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதாக பிரேத பரிசோதனை செய்த மாவட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் ஜீ சி ஆர் ஹேவாவர்ட் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ–032)

### இன்றைய திரைகளில்

10 வது வாரம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
கடைசி வாரம்
2-30. 6-00. 9-30

லிடோ
(யாழ்நகர்)
10-30. 2-00. 6-00

நியூசிகிரி
(கட்டுகஸ்தொட்டை)
10-30. 2-30. 6-15

### ஜனநாயக வழி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாருமே அடக்கி ஒடுக்கி விட முடியாது. புலிகளுடன் நல்லுறவை வளர்ப்பதற்கு இந்திய அரசு சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும். அது தான் ஒரே வழி.

எங்களை ஒருவராலும் அடக்கி அடிபணிய வைக்க முடியாது. உலகின் 4 ஆவது பெரிய இராணுவத்தையே தோற்கடித்து எமது பலத்தையும் மன உறுதியையும் இலட்சியப் பற்றையும் உலகுக்குக் காட்டி விட்டோம்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று குரல் எழுப்புபவர்களும் கோரிக்கை விடுப்பவர்களும் புலிகள் ஏன் ஆயுதங்களை ஏந்தினார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

ஆயுதங்களைக் கீழே வைத்தால் இனப் பிரச்சினை தீரும் என்பது தவறு. இனப் பிரச்சினை தீர்ந்தால் ஆயுதப் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும்.

மற்ற மாகாணங்களைப் போல வடக்கு - கிழக்கிலும் மக்களின் பிரச்சினைகளை மனிதாபிமான அடிப்படையில் தீர்க்க வேண்டும்.

கள் புலிகளே என்றும், அது தேர்தலில் நிரூபிக்கப்படும் என்றும் பிரபாகரன் மேலும் சொன்னார்.

புலிகள் இயக்கத்தின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிங்கள மக்கள் மத்தியிலும் தனது கொள்கைத் திட்டங்களைப் பரப்ப இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு கண்டு அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கு முஸ்லீம் மக்கள் தமக்குப் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்க வேண்டும் என்றும் திரு பிரபாகரன் கேட்டுக் கொண்டார்.

பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகள் பலவற்றிற்கும் திரு பிரபாகரன் "பட் பட்" என்று பதிலளிக்கார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு யோகரத்தினம் யோகி, புலிகளின் யாழ் அரசியல் பிரிவுத் தலைவர் திரு ஸ்டான்லி டொமினிக், புலிகள் யாழ் அமைப்பாளர் திரு பாலு ஆகியோரும் திரு பிரபாகரனுடன் இருந்தனர். (உ–மு)

## மருதங்கேணியில் பட்டதாரி ஆசிரியர் மர்மமான முறையில் மரணம்

புளை மார்ச் 31

கொழும்பில் கடமையாற்றும் இளம் பட்டதாரி ஆசிரியர் மர்மமான முறையில் மருதங்கேணியில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மருதங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்தையா சண்முகலிங்கம் என்னும் இளம் தலைப்பட்டதாரி ஆசிரியரே கொலை செய்யப்பட்டவராவார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக இவர் கடமையாற்றுகின்றார்.

மருதங்கேணியில் உள்ள வீட்டுக்கு வந்திருந்த இவர் திரும்பவும் கொழும்புக்குச் செல்வதற்கு முன் கடவுளை வழிபடுவதற்காக வடலியடி பிள்ளையார் கோயிலுக்கு செல்லும்போதே கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது சடலம் கோயிலுக்கு அண்மையில் காணப்பட்டது.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

கொலையுண்டவரின் தலையில் காயமும் கையில் உரசல் காயங்களும் காணப்பட்டன. (இ—239)

### வடக்கு கிழக்கில் புதிய நியமனங்கள் நிறுத்த பணிப்பு

திருகோணமலை, மார்ச் 31

வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவிற்கு எதுவிதமான புதிய நியமனங்களும் செய்யக் கூடாது.

ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனவிரத்ன இவ்வாறு பணித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (இ–288)

### பகவத்கீதை பற்றிய ஆய்வுரை ஆங்கிலத்தில்

கொழும்பு, மார்ச்– 30

"பகவத் கீதையின் முக்கிய கோட்பாடுகள்: இணைப்பும் பகுப்பும்" என்ற பொருள் பற்றிய ஆங்கில மொழியிலான ஆய்வுரை ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி (சனிக்கிழமை) நடைபெறும்.

சனிக்கிழமை மாலை 4–30 மணிக்கு இந்துமகா காப்புறுதிக் கூட்டுத்தாபன 14 வது மாடியில் மேற்படி ஆய்வுரை நடைபெறும்.

பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி மகேஸ்வரி அருட்செல்வம் இப்பொருள் பற்றி ஆய்வுரை நடத்துவார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் உப தலைவர் சுவாமி சம்பிரஜீனானந்தா ஆய்வுரைக்கு தலைமை தாங்குவார்.

இந்துசமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜும் வைபவத்தில் கலந்து கொள்வார். (இ–ர)



சிறுவர் புத்தாண்டு விழா

## புனித ரமழான் சொற்பொழிவுகள்

கண்டி மார்ச் 31

கண்டி ஒராபி பாஷா கலா நிலையத்தில் புனித ரமழான் நோன்பை முன்னிட்டு விசேட சொற்பொழிவுகள் நடைபெற உள்ளன.

இந்தச் சொற்பொழிவுகள் இன்று 2ஆம் திகதி தொடக்கம் நடைபெற உள்ளன. முற்பகல் 10–30 தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் உரைகள் இடம்பெறும்.

இன்று 2ஆம் திகதி அரபு விரிவுரையாளர் ஜனாப் எம் ஐ எம் அமீனும் 14ஆம் திகதி மௌலவி எ வி எம் சதாத்துல்லாவும் 21ஆம் திகதி அரபு விரிவுரையாளர் அல்ஹாஜ் மௌலவி எ எல் எம் இப்றாஹிம் ஆகியோரும் இந்த மார்க்கச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவார்கள்.

பெண்களுக்கு இங்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கலாநிலைய பணிப்பாளர் அல்ஹாஜ் எஸ் எம் எ ஹஸன் தினபதிக்கு தெரிவித்தார்.

### விக்டர் தென்னக்கோன் காலமானார்

கொழும்பு, ஏப் 1

முன்னாள் பிரதம நீதியரசர் விக்டர் தென்னக்கோன் நேற்று மரணமானார்.

இறக்கும் போது அவருக்கு வயது 76. சுகவீனம் காரணமாக கொழும்பில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றுக் காலை அவர் மரணமானார்.

இன்று அவரின் இறுதிக் கிரியைகள் கனத்தை மயானத்தில் நடைபெறும்.

### சண்டையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

சில கட்டங்களில் எனது முடிவு நெருங்கி விட்டது என எண்ண வேண்டிய நிலையும

### எயிட்ஸ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில தினங்கள் ஆஸ்பத்திரியில் இருக்க நேரிடுமென்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

பிரபு - அமலா
சிறுவன் மீனராஜ் நடித்த
பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

17 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
மிட்லண்ட்
(நாவலப்பிட்டிய)
10-30, 2-00, 6-00, 9-00
சாந்தி
(மட்டுநகர்)
2-30, 6-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

18 வது வாரம
வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
கிங்ஸ்
(பதுளை)
10-30, 2-30, 6-00
நியூ ரொயல்
(இரத்தினபுரி)
10-30, 2-30, 6-00, 9-00
கார்த்திக் - குஷ்பு
வி.கே. ராமசாமி
நடித்த
வருஷம் 16
(கலர்)

ஜனநாயக வழியில் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம தீர்வு காண முயல்வோம. தீர்வு ஏற்படா விட்டால் மீண்டும போராட்டம நடத்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்றார் பிரபாகரன்.

வடக்கு - கிழக்கு மக்களின் முழு ஆதரவைப் பெற்ற பிரதிநிதி

(உ-மு)

## ஸ்ரீ. ல. சு. கட்சி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம கொண்ட ஸ்ரீ ல சு க யினர் ஜெனரல் ஹனாபெதி சலங்க கொள்ளும் வைபவங்களில் தாம கலந்து கொள்வதில்லை என அறிவித்திருந்தனர்.

அமைச்சர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் ஆரம்பிக்க வைபவம போது தாமது கட்சி கலந்து கொள்வதா இல்லையா என்பதைப் பற்றி பொதுச்செயலாளர் தீர்மானிக்கப்படும என திரு திசாநாயக்க தெரிவித்தார்.

(ண-ற)

## பரிசளிப்பு விழா

கிந்தோட்டை - மஹஹுகல "மஜ்ம அல்ஹஸனிவல் ஹுஸைன்" பள்ளிவாசலுடன் இணைந்த குர்ஆன் மத்ரஸாவின் 12 ஆவது வருடாந்தப் பரிசளிப்பு விழா சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. (ஜ-034)

## தடுப்பு...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

வும—

குற்றச்சாட்டுக்கள் இல்லாதோரை விசாரணைகளுக்குப் பின்னர் உடன் விடுவிக்கலாம என்றும பொலீஸ் மா அதிபர் உத்தரவிட்டிருக்கிறார்.

இமமாத நடுப் பகுதிக்குள் சகல விசாரணைகளும முடிவுற வேண்டும என்றும —

கைதாகியிருக்கும பௌத்த பிக்குமார் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும என்றும திரு ஏர்னஸ்ட் பெரேரா பணித்திருக்கிறார்.

(ண-007)

தல்கிசை பௌத்த மகளிர் கல்லூரியின் சிறுவர் புத்தாண்டு விழா கடந்த 28ஆம திகதி நடைபெற்றது.

விழாவின் ஓர் அமசமான அழகு ராணிப் போட்டியில் வெற்றி பெற்ற நிலுக்ஷி பிரியந்தி பெர்னாண்டோவிற்கு இரண்டாவது இடத்தை பெற்ற புபுது லக்ஷிதா ரத்னாயக்க மற்றும மூன்றாவது இடத்தைப் பெற்ற ஹர்ஷனிகுமாரி ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்த போது எடுக்கப்பட்ட படம்.

(ண-ற)

எண்ண வேண்டிய நிலையும வந்தது.

ஒரு முறை நான் தங்கி இருந்த இடத்திற்கு அருகில் 250 கிலோ கிராம குண்டு ஒன்று போடப்பட்டது. நான் எமது மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய வேண்டும என்று அந்தக் குண்டு என்னை விட்டு வைத்தது.

இப்படி திரு பிரபாகரன் தெரிவித்தார்.

(உ-மு)

கள் தெரிவித்தனர்.

குழந்தைக்கு எட்ஸ் நோய் வைரஸ் கிருமியின் தாக்கம எந்த நிலையில் உள்ளதென்பதை அறிய டாக்டர்கள் பரிசோதனை செய்து வருகின்றனர்.

"எவருக்கும குழந்தையைக் கொடுக்க மாட்டோம. அன்பாக வைத்து நாம வளர்ப்போம" என்று பெற்றோர் தெரிவித்ததாக ஆஸ்பத்திரி பேச்சாளர் ஒருவர் கூறினார்.

(உ-007)

# திருமலை சிங்கள அகதிகளுக்கு சொந்த இடங்களில் குடியேற அனுமதி

## மாகாண ஆளுநர் நளின் வழங்கினார்

தமபலகாமம் மார்ச் 31 திருமலை பிறக்ரிக் கோட்டையில் இருக்கும சிங்கள அகதிகள் தாங்கள் விரும்பும பட்சத்தில் தங்களின் முன்னைய இடங்களில் குடியேறலாம என மாகாண ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனிவரத்தின அனுமதி வழங்கினார்.

இந்த அகதிகளை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக அண்மையில் திருமலைக் கச்சேரியில் ஆளுநர் தலைமையில் மாநாடொன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அரசாங்க அதிபர் திரு கே பி விஜயதோன் இணைப்பதிகாரி பிறி லால் வீரசூரிய பிரதி பொலீஸ் மா அதிபர் திரு ரி ஈ ஆனந்தராசா உட்பட விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ரூபன் ஆகியோரும 10க்கு மேற்பட்ட அகதிகளின் பிரதி நிதிகளும கலந்து கொண்டனர்.

மட்கோவ் சிறிமாபுர லிங்க நகர் உப்புவெளி நடராஜவத்த வீரநகர் அகிய பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் தாங்கள் முன்னர் வாழ்ந்த இடங்களில் மீண்டும குடியேறுவதற்கு சமமதம தெரிவித்தனர்.

இந்த இடங்களில் தாங்கள் குடியேற விரும்பினால் குடியேறலாம என ஆளுநர் தெரிவித்தார்.

ஆனால் ஏதாவது முட்டுக்கட்டைகள் சிக்கல்கள் தோன்றினால் குடியேற வேண்டாமென வும ஆலோசனை தெரிவித்தார்.

அவ்வாறு உடனடியாக குடியேற விரும்புபவர்களின் பட்டியல் ஒன்றை இரண்டு நாட்களில் அரசாங்க அதிபரிடம சமர்ப்பிக்குமாறும ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

(இ-288)

# மக்கள் கஷ்டங்கள் நீங்க

## புதிய அமைச்சர்கள் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 1

அத்தியாவசிய உணவுப் பொருட்களை குறைந்த விலையில் வழங்கும பொருட்டு வர்த்தக அமைச்சுடனும, சமபந்தப்பட்ட ஏனைய அமைச்சுகளுடனும, தனது உணவுக் கூட்டுறவு அமைச்சு தொடர்பு கொண்டு இணைந்து செயலாற்றும என்று அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி கூறினார்.

மக்கள் எதிர்நோக்கியிருக்கும பொருளாதார நெருக்கடிகளை தீர்த்து வைப்பதே முதல் கடமையாகக் கருதி அமைச்சர்கள் செயலாற்ற வரவேண்டும. அதிகரித்து வரும வாழ்க்கைச் செலவை சமாளிக்கக் கூடிய விதத்தில் மக்களின் வருமானத்துக்கு வழி செய்ய அமைச்சர்கள் முயற்சிக்க வேண்டும. இப்படி ஜனாதிபதி கூறியதை அடுத்தே அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி மேற்கண்டவாறு சொன்னார்.

கொழும்பு துறைமுகம சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்படுவதோடு, காலி, திருகோணமலை காங்கேசன்துறை துறைமுகங்களும தரமுயர்த்தப்படும என்று வரத்து அமைச்சர் ரூபா கருணாதிலக்க கூறியுள்ளார்.

விவசாய காணிகளில் இருந்து அதிகபட்ச பிரயோசனம பெறுவதன் மூலம உற்பத்தி அதிகரிக்கப்படும. என்று விவசாய ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாச பண்டா தெரிவித்தார்.

தொழில் பயிற்சித் திட்டங்கள் இளைஞர்களிடையே விஸ்தரிக்கப்படும. அதன் மூலம புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படும. தொழிலாளர்களின் உழைப்புக்கு ஏற்றாற்போல சரியான சமபளம வழங்க நடவடிக்கை எடுக்கப்படும. இப்படி புதிய தொழில் தொழில் பயிற்சி அமைச்சர் ஜி எம் பிரேமசந்திர கூறினார்.

பல சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கக் கூடியதாக இருப்பதால் கிராம மின்சார வழங்கல் திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற முயற்சி எடுப்பேன் என்று எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் சந்ரா பண்டார தெரிவித்துள்ளார்.

புதிய வெளிவிவகார அமைச்சர் ஹெரால்ட் ஹேரத் நாட்டின் தேசிய தன்மையை பிரதிபலிக்கும வகையில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் சீரமைக்கப்படும என்று கூறினார்.

(உ-032)

தினபதி
சிறு விளம்பரம்

தேவை

இலுப்பம விதை தேவை,
"மில்க்வைற் - யாழ்ப்பாணம்"

# பூ பூத்த நந்தவனத்தில் சிறந்த நடிகையாக சரிதா!

"இன்று திரை உலகிற்கு எத்தனையோ புதுமுகங்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் யாரும் என் இடத்தை பிடிக்கவில்லை. அது காலியாகவே இருக்கிறது. அதை மீண்டும் நான் பிடிப்பேன்" என்று கூறினார் நடிகை சரிதா


கணவனுடன் சரிதா

கடந்த ஆண்டின் சிறந்த நடிகையாக, தமிழக அரசால் தேர்ந்து எடுக்கப்பட்டு தங்கப் பதக்கம் பரிசு பெற்றவர் நடிகை சரிதா.

இதையொட்டி "நட்சத்திர பேட்டி"க்காக சென்னை ஜாபர்கான் பேட்டை ராகவரெட்டி காலனியில் உள்ள சரிதா வீட்டுக்கு சென்றபோது – கையில் கைக்குழந்தை – அருகே கணவர் சகிதம் குடும்பப் பாங்காக காட்சியளித்தார் சரிதா.

அவரிடம் சிறிதும் மாற்றமில்லை அதே உடல் அமைப்பு இல்லை, குறையவும் இல்லை என்ன... முன்பை விட சற்று சிகப்பாக தெரிகிறார். ஆங்கிலம் அழகாக பேசுகிறார்.

தோளில் குழந்தையைப் போட்டு தட்டிக் கொடுத்து தூங்க வைத்தபடியே பேட்டி அளித்தார்.

"என் திடீர் திருமணம்! பிறகு மருமகளாக மாமியார் வீட்டுக்கு (கேரளா) சென்று தங்க வேண்டிய சூழ்நிலை! உடனடியாக கர்ப்பம் – பிறகு குழந்தை என்று தொடர்ச்சியாக ஏதாவது ஒரு சூழ்நிலை இருந்து கொண்டே இருந்ததால் என்னால் சினிமாவில் தொடர்ந்து நடிக்க முடியாமல் ஆகிவிட்டது.

1½ வருஷம் இடைவெளி... எவ்வளவு சீக்கிரம் காலம் ஓடி விட்டது?

இந்த 1½ ஆண்டுகளில் என்னால் படங்களில் நடிக்க முடியாமல் போனாலும் பட உலகம் எப்படி இருக்கிறது. யார் யார்

பாக்கியமும் எனக்கு கிடைத்து விட்டது.

அதனால் தான் நானாக நடிப்புக்கு "கமா" போட்டிருந்தேனே தவிர முற்றுப் புள்ளி வைத்து விடவில்லை.

குழந்தை பிறந்த மறு மாதமே கூட என்னை நடிக்க அழைத்தார்கள். நான்தான் "குழந்தை சற்று வளரட்டும்" என்று வந்த வாய்ப்பை உதறி விட்டேன். என் குழந்தை இப்போது ஓரளவு வளர்ந்து விட்டான். இனி நடிப்பதில் எனக்கு எந்த பிரச்சினையும் கிடையாது.

"தமிழக அரசு உங்களை சிறந்த நடிகையாக தேர்வு செய்து தங்கப் பதக்கம் வழங்கி இருக்கிறதே... அது பற்றி..."


"சினிமாவில் மீண்டும் நடிக்க வரும் எனக்கு இந்த விருது ஒரு நல்ல "டானிக்" மாதிரி எனக்கு தானாகவே அமைந்து விட்டது. இது எனக்கு பெருமையாக இருக்கிறது.

தமிழக அரசின் சிறந்த நடிகைக்கான விருதை நான் பெறுவது இது 2 ஆவது தடவை இதற்கு முன்பு "ஒரு வெள்ளாடு வேங்கையாகிறது" படத்தில் நடித்ததற்காக மறைந்த முதல்அமைச்சர் எம் ஜி ஆரின் கையினால் விருது பெற்றேன்.


குழந்தையுடன் சரிதா

அதே போல், கலைஞரின் கையினாலும் சிறந்த நடிகைக்கான பரிசு வாங்கிய நிகழ்ச்சி எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தந்துள்ளது.

அதுவும் திருமணத்திற்கு முன்பு நான் கடைசியாக நடித்த படம் "பூ பூத்த நந்தவனம்" அந்த படம்தான் சிறந்த படமாகவும், அதில் நடித்த என்னை சிறந்த நடிகையாகவும் தமிழக அரசு தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கி இருப்பது – மீண்டும் திரை உலகம் புகும் எனக்கு வாழ்த்துக் கூறி வரவேற்புக் கொடுப்பது போல் தற்செயலாக அமைந்து விட்டது என்றார். (இ–10)


இளசுகளின் இந்த நெருக்கம் மேலும் பல புதுசுகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லையோ? (ராம மனோகர்–திவ்யா) (படம்– நீங்களும் ஹீரோதான்) (இ—10)

# காலி கச்சேரியில் தமிழ் தெரிந்தவர்கள் எவரும் இல்லை

## முஸ்லிம்கள் அவதி

காலி, மார்ச் 31

காலி கோட்டையில் அமைந்துள்ள மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்தில் (கச்சேரி) சிங்களம் பேசும் அதிகாரிகளும் ஊழியர்களும் மட்டுமே பணி புரிகின்றனர்

இங்கு தமிழ் பேசும் அதிகாரிகளும் ஊழியர்களும் இல்லை–

இதனால் மேற்படி செயலகத்துக்கு அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றச் செல்லும், சிங்களம் தெரியாத முஸ்லிம் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்–

காலி மாவட்டத்தைச் சேர்ந்த 10000 க்கும் மேற்பட்ட முஸ்லிம் பிரஜைகள் பிரஸ்தாப அரசாங்க நிறுவனத்துடன் தொடர்பு வைத்துள்ளனர்–

தத்தமது முக்கிய தேவைகளின் நிமித்தம் அங்கு செல்லும் பாமர முஸ்லிம் மக்கள் தனிச் சிங்களத்தில் எழுதப்பட்ட தஸ்தாவேஜுகளையும் பத்திரங்களையும் வாசித்து அறிந்து கொள்ள முடியாமல் அவதியுறுவதை அன்றாடம் அவதானிக்க முடிகிறது–

மேற்படி அலுவலகத்தில் இருந்து விநியோகிக்கப்படும் பிறப்புச் சான்றிதழ்கள், உணவு முத்திரைக் கார்டுகள் ஆகியவற்றில் முஸ்லிம் மக்களின் பெயர் விவரங்கள் பிழையாகவும் தவறாகவும் பதிவு செய்யப்படுவதால் முஸ்லிம் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே காலி மாவட்ட முஸ்லிம் மக்கள் நலன் கருதி மேற்படி நிறுவனத்தில் தமிழ் தெரிந்த முஸ்லிம் அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமிப்பதற்கு உள்நாட்டலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் அதிகாரிகளும் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகிறது–

[இ—034]

வடக்கு கிழக்கு

# அமைச்சுகளிலுள்ள மேலதிக ஊழியர்களை விலக்க நடவடிக்கை

திருகோணமலை, மார்ச் 31

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பல்வேறு அமைச்சுகளில் தேவைக்கு அதிகமாக இருக்கும் ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியவந்துள்ளது.

இது பற்றி மாகாண ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனிவிரத்னவால் சகல பதில் செயலாளர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிய வந்துள்ளது,

இப்போது கடமை புரியும் ஊழியர்களில் பெரும் பாலானோர் சமயாசமய ஊழியர்களாகவே இருக்கின்றனர்; ஒரு சிறு எண்ணிக்கையினர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்; சமயாசமய ஊழியர்களே வேலைநீக்கம் செய்யப்படவுள்ளனர்; எனினும் வேலை நீக்கம் செய்யப்படும் போது கடைசியாக வந்தவர் முதலில் செல்ல வேண்டும். என்னும் முறை கடைப்பிடிக்கப்படுமாம்.

இதனால் பெரும்பாலான தமிழ் ஊழியர்கள் வேலை இழக்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

(இ–288)

# பதுளை நகரில் குடிதண்ணீர் பிரச்சினை

பதுளை மார்ச் 31

பதுளை நகரில் மீண்டும் குடி தண்ணீர் பிரச்சினை எழும்பியுள்ளது;

இதுவரை காலம் காலை இரண்டு மணி நேரமும், மாலை இரண்டு மணித்தியாலமும் பொது மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

கடந்த ஒரு வார காலமாக காலை ஒரு மணித்தியாலம் மாத்திரமே குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது, அதுவும் மண் கலந்த தண்ணீரே வழங்கப்பட்டு வருகிறது.

இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

சுத்தம் செய்யப்படாத ஆற்றுநீர் குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதால் பலர் நோய்வாய்ப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

13 கோடி ரூபா செலவில் பதுளையில் புதிய குடி தண்ணீர் திட்டமொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது, ஆனால் இத்திட்டம் எப்போது முடிவடையும் என்பது தெரியாது;

இத்திட்டம் பூர்த்தியாவதற்கு இன்னும் ஒரு வருடமாவது செல்லும் எனக் கூறப்படுகிறது, அதுவரை பொது மக்கள் அவதிப்பட வேண்டுமா என கேள்வி எழுப்பப்படுகிறது,

எனவே இங்குள்ள மக்களுக்கு போதுமான குடி தண்ணீர் வழங்க முன்வர வேண்டும் என்பதே பொது மக்களின் கருத்து எனக் கூறப்படுகிறது.

(இ–037)

# தப்பி ஓட முயன்றவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம்

## ஒருவர் பலி; இருவருக்கு காயம்

யில் இச் சம்பவம் நடந்துள்ளது

மேற்படி கடத்தலில் ஈடுபட்டிருந்த இனம்தெரியாத நபர்கள் ஆயுதப் படையினரின் சீருடையில் காணப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது–

அனுராதபுரத்தில் இரண்டு

எப்படி இருக்கிறது. யார் யார் புதிதாக நடிக்க வந்து இருக்கிறார்கள்? யார் எப்படி நடிக்கிறார்கள், படம் எப்படி என்று கவனித்துக் கொண்டே தான் இருந்தேன்... இருக்கிறேன்.

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால், நீங்கள் மீண்டும் சினிமாவில் நடிக்க விரும்புவது மாதிரி தோன்றுகிறதே..."

"ஏன்? நான் நடிக்கக் கூடாதா? "சினிமாவில் நடிக்க மாட்டேன்" என்று நான் யாரிடமாவது கூறினேனா... இல்லையே.

ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சி என் வாழ்க்கையிலும் நடந்தது. திருமணத்துக்கு பிறகு தாய் ஆவதில்தான் பெண்ணின் மகிழ்ச்சியே அடங்கி இருக்கிறது.

ஆண்டவன் அருளால் அந்த

# ஜீவிதா நடிக்கும்

## மன்னிக்க வேண்டுகிறேன்

"இதுதான்டா பொலீஸ்" வெற்றிப் படத்தை அளித்த ஏ வி கிரியேஷன்ஸ் அடுத்து உருவாக்கும் படம், "மன்னிக்க வேண்டுகிறேன்"

இதில் ராஜசேகர் – ஜீவிதா இணைந்து நடித்துள்ளனர்.

இன்னொரு கதாநாயகி ராமாயண புகழ் தீபிகா. இவர் நடித்து வெளிவரும் முதல் தமிழ் படம் இது.

சரத்பாபு, புதுமுகம் ராகவா நிஷாந்தி ராஜலட்சுமி அன்ன பூரணி பேபி விஜயா ஆகியோரும் நடித்துள்ளனர்.

சந்திரசேகர் வசனம் எழுதி



ஜீவிதா

இருக்கிறார்.

தெலுங்கில் பல வெற்றி படங்களை தந்த ரவிராஜ பின்னிஷெட்டி டைரக்ட் செய்துள்ளார்.

ஒளிப்பதிவு செய்தவர் விஜய். இசை: சக்ரவர்த்தி-

படத்தின் வெளிப்படக் காட்சி திருப்பதியில் படமாக்கப்பட்டது.

ராஜசேகர் தன் உடலில் உள்ள ரத்தம் முழுவதையும் தானம் செய்வது போன்ற காட்சியும் படமானது.

தாலி கட்டிய மனைவியை ஒரு கணவன் சந்தேகிப்பதால் ஏற்படும் துயரமான விளைவுகளை இந்தப் படத்தின் கதை சித்திரிக்கிறது. (இ–10)

### தனிமையில் ஓட்டல் அறையில்

# காதலியுடன்இருந்தகணவன் மனைவியிடம் பிடிபட்டார்!

கோவிந்தா திருமணம் ஆனவர். அவருடைய மனைவி சுனிதா.

திருமணத்துக்குப் பின் திவ்யா என்ற புதுமுகத்துடன் கோவிந்தாவுக்கு நெருக்கம் ஏற்பட்டது.

இருவரும் ஒரு ஹோட்டல் அறையில் தனிமையில் இருந்தார்கள்.

இந்த விஷயம் அறிந்த கோவிந்தாவின் மனைவி சுனிதா கோபத்துடன் அந்த ஹோட்டலுக்குப் போனார்.

கணவரையும் திவ்யாவையும் அரைகுறை உடையில் கையும், களவுமாகப் பிடித்தார்.

"உன்னை தோழி என்று நினைத்தேன். துரோகம் செய்து விட்டாயே" என்று திவ்யாவைத் திட்டித் தீர்த்தார். குடுமிப்பிடி சண்டை நடக்காத குறை. (இ–10)

## தினபதி சினிமா

கொழும்பு, ஏப். 1

சும்பஹாவில் ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்து பொலீஸார் ஆட்டோ ஒன்றினை சோதனையிட முயன்றபொழுது ஆட்டோவில் இருந்தவர்கள் தப்பி ஓட முனைந்தனர்– இதனால் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார்– மேலும் இருவர் காயமடைந்தனர்–

பொலீஸார் அவ்வாகனத்திலிருந்து மேலும் இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்

அவர்களிடம் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளும் 12 துணை தோட்டாக்களும், ஒரு சவரக் கத்தியும் கிறிஸ் கத்தியும் விளையாட்டு துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன–

அரசு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்படி விவரம் தெரிவிக்கப்பட்டிருந்தது–

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்த விவரங்கள் வருமாறு–

இரத்தினபுரியில் உள்ள விகாராக்கந்தை என்னும் இடத்தில் பொலீஸார் தீவிரவாதிகளின் ஒளிவிடம் ஒன்றை சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்–

அங்கு வெடி பொருட்கள் பாதுகாப்பு பிரஸ்கள். வெடிக்க வைக்கும் கருவி, ஜெலிக்நைற் குச்சிகள், 12 துளை ரவைகள் கைக்குண்டுகள் துப்பாக்கிகள் சொட்கன் 122 தேசிய அடையாள கார்டுகள் மற்றும் ஜே வி பி துண்டுப் பிரசுரங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன–

அம்பாறையில் இரண்டு ஈ பி அர் எல் எப் இயக்க உறுப்பினர்கள், பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர்–

அவர்கள் ஏ கே 47 துப்பாக்கிகள் இரண்டையும் ஏ கே 47 ரவை பெட்டிகள் எட்டையும்

படையினரிடம் ஒப்படைத்தனர்

குருநாகலில் வைத்து இனம் தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் எஸ் பி ராஜபக்ச என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார் மேற்படி நபரிடம் இருந்த பணமும்

வீட்டு உபகரணங்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன–

ஹொரராகலை என்னும் இடத்தில் ஐ எம தர்மபாலா என்பவர் கடத்தப்பட்டுள்ளார்– தனது காரில் சென்று கொண்டிருக்கை

அனுராதபுரத்தில் இரண்டு சந்தேக நபர்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர்–

இப்படி அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது– (இ–404)


இப்பொழுது பெறலாம்!

குணசேன

ஆங்கில–தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் – எஸ் நடராசா

விலை ரூ. 190.00




பாடசாலை மாணவர்களுக்குப் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.

எம். டி. குணசேன

அன்ட். கம். லிமிட்.

217– ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய– களுத்துறை– காலி– மாத்தறை– கண்டி– குருநாகல்– நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை– பொல்காவலை– கண்டி– காலி– மாத்தறை– அனுராதபுரம்

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

— 1990 ஏப்ரல் 2 —
சுடர் 18 கதிர் 4449

# கங்குக் கீரைக்கு நல்ல வெளிநாட்டு வாய்ப்பு

## இந்திய மீனவர் விவகாரம்

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட 311 இந்திய மீனவர்களும் தமது படகுகளுடன் வீடுகளைச் சென்றடைந்து விட்டார்கள்.

தமிழக முதலமைச்சர் மு கருணாநிதி சட்டப் பேரவையில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த மீனவர் விவகாரம் தமிழ்நாட்டில் பெரும் பிரச்சினையாக வெடித்தது.

தமிழக சட்டப் பேரவையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்தைப் பிழிந்து எடுத்து விட்டார்கள்.

அதனாற்றான் மீனவர்கள் தத்தமது வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்ததும் முதல்வர் அதை உடனுக்குடன் பேரவையில் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசித்து இந்த மீனவர்கள் மீன் பிடித்தார்கள்.

இப்படி இந்திய மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவல் செய்து இலங்கை மீனவர்களின் குறிப்பாக வடபகுதி மீனவர்களின் பிழைப்பைக் கெடுக்கிறார்கள்.

அத்துடன் வடபகுதி மீனவர்களின் வலைகளை அறுத்துச் சேதப்படுத்திப் பெரும நட்டத்தையும ஏற்படுத்துகிறார்கள்.

இவை பற்றி எல்லாம பல மீனவர்கள் புகார் செய்ததை அடுத்தே விடுதலைப் புலிகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்திருந்த இந்திய மீனவர்களை அவர்களின் படகுகளுடன் மடக்கிப் பிடித்து வைத்திருந்தார்கள்.

## ஏற்றுமதிப் பயிராக வளர்த்து விவசாயிகள் பயன் பெறலாம்

வீட்டுத் தோட்டத்தில் வளரும், கன்கும எனப்படும், கங்குக் கீரைக்கு வெளிநாட்டில் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது,

கங்குக் கீரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும திட்டம, அக்டோபர் மாதம முதல் அரசாங்க ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படும.

விவசாயிகள் இக்கீரை வளர்ப்பை, நெல் அறுவடைக்குப் பின்னரே மேற்கொள்வர். வத்தாளைக் கிழங்கு உற்பத்தியிலும சிலர் ஈடுபடுவர். இதற்கு அதிகம தண்ணீர் தேவைப்படாது

இதே வேளையில் உரமானியம் ரத்தானது பெரும்பான்மையான விவசாயிகளைப் பாதித்துள்ளது. எனவே விவசாய உற்பத்தியும பாதிப்படையலாம.

இக்கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்க அரசாங்கம முன்வந்துள்ளது,

உரமானியம ரத்து செய்யப்பட்டதினால் சுமார் 60 சதவீதமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பிக் கொட்டைக்கும உலக சந்தையில், பாரிய கிராக்கி உள்ளது;

எனவே மேலதிக லாபம தரும பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள், கங்குக் கீரை உற்பத்தி அவர்களுக்கு பேருதவி புரியலாம.

(ம—455)

## கட்டிடங்கள் அமைப்பு

பொகவந்தலாவை மார்ச் 31

பொகவந்தலாவ ஹெரலி ரோசரி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு சீடா நிறுவனம பல கட்டிடங்களை தற்போது அமைத்து வருகின்றது—

இதனால் இங்கு கல்வி கற்கும மாணவர்களின் இடவசதி பெருகும—

மலையகத்திற்கு சீடா செய்து வரும மகத்தான பணிக்கு பலரும பாராட்டுத் தெரிவிக்கின்றனர்—

(ஐ—041)

## நவீன போதனா வைத்தியசாலை

வவுனியா மார்ச் 31

திருநெல்வேலியில் நவீன போதனா வைத்தியசாலை அமைக்கப்படும—

இத்திட்டத்தின் மூலம 1200 கட்டில்கள் கொண்ட நவீன மயப்படுத்தப்பட்ட வைத்தியசாலை அமைக்கப்படும—

யாழ் போதனா வைத்தியசாலை படிப்படியாகப் புதிய வைத்தியசாலைக்கு இடமாற்றப்படும— யாழ் வைத்தியசாலையில் விசேட பிரிவுகள் மட்டும இயங்கும— தற்போது திருநெல்வேலியில் இயங்கும விவசாயப் பயிற்சிப் பாடசாலை கிளிநொச்சிக்கு இடமாற்றப்பட்டு அவ்விடத்திலே இந்த நவீன வைத்தியசாலை அமைக்கப்படும—

இந்த நவீன வைத்தியசாலை ஜப்பானிய அரசின் உதவியுடனே அமைக்கப்படும— நவீன இயந்திரங்களும இங்கு பொருத்தப்படும—

(ஐ—101)

## நிந்தவூர்

## மீராநகர் அரசாங்க பாடசாலையின் அவலம்

நிந்தவூர் மீராநகரில் அமைந்துள்ள க/மு அரசினர் வடக்கு முஸ்லிம கலவன் பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருக்கும இளம சிறார்கள் பெரும அவல நிலைக்கு உள்ளாகி இருக்கிறார்கள்—

இப் பாடசாலை முதலாம வருடம தொடக்கம ஆறாம வருடம வரை வகுப்புக்களைக் கொண்ட ஒரு ஆரம்பப் பாடசாலையாகும—

இப் பகுதியிலுள்ள 99 சதவீதமான ஏழை மாணவர்கள் இப் பாடசாலையிலேயே கல்வி பயின்று வருகிறார்கள்— இப்பாடசாலை ஆரம்பமாகும வேளைகளில் அநேகமாக இளம மாணவச் சிறார்கள் வீதிகளில் புத்தகப் பைகளைச் சுமந்தவாறே அழுது




கொண்டு செல்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது—

மாதா மாதம இம்மாணவர் சிறார்களிடம மாதாந்தக் கட்டணம, வசதிக் கட்டணம என்றெல்லாம பணம வசூலிக்கிறார்களாம ஆசிரியர்கள்—

வறிய மாணவர்கள் வசதிக் கட்டணம செலுத்தத் தவறும பட்சத்தில் ஆசிரியர்களுடன் சேர்ந்து அதிபரும தண்டிக்கிறாராம—

இத் தண்டனைகளுக்குப் பயந்து இளம மாணவச் சிறார்கள் பாடசாலைக்குப் போகவும பயப்படுகிறார்கள்— படிப்பையே பெரிய பாரமாக நினைக்கிறார்கள்—

வறிய மாணவர்களும கல்வியறிவைப் பெற வேண்டும என்பதற்காகவே அரசு இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியதோடு இலவச பாடநூலையும வழங்கி கல்வி விருத்திக்கு உதவி வருகிறது—

இதேவேளை ஏழை மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைகளையும அரசு மானிய அடிப்படையில் கொடுப்பதற்கு உத்தேசித்துக் கொண்டிருக்கும வேளையில் ஏன் இவ் ஆசிரியர்கள் சட்டவிரோதமாக சில வரி அறவீ

ஊடு. சே. நிதி

## புனித ரமழான் சிந்தனைகள்

இது ரமழானின் முதற் பகுதி—

"ரஹ்மத்" என்ற அல்லாஹ்வின் அருள் பொழியப்படும இந்த முதல் பகுதியிலே இருந்து கொண்டிருக்கும நாம நிறைய நிறைய அமல்கள் மூலம அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டும—

மனிதர்களே! நிச்சயமாக நாம உங்களை ஓர் ஆண் ஓர் பெண்ணில் இருந்துதான் சிருஷ்டித்தோம—

பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும பொருட்டு உங்களைக் கிளைகளாகவும கோத்திரங்களாகவும ஆக்கினோம—

ஆதலால் உங்களில் ஒருவர் வதால் நாம பயபக்தி மிக்கவர்களாக எப்போதும வாழ வேண்டும—

பெருமை பாராட்டுவதில் எமக்கு ஒன்றும கிடைப்பதில்லை மாறாக நாம சிறுமையே அடைவோம—

எனவே ரமழானின் இந்த இனிய நாட்களிலே நாம பயபக்தி மிக்கவர்களாக மாற உறுதிபூணுவோம—

அல்லாஹ் ரஹ்மத்தை எம மீது அள்ளிச் சொரிவானாக!

ஆமீன்ம ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

* நோன்பின் நிய்யத்து

நவைத்து சௌமகதின் அன் அதாயி பர்ழி ரமழானி ஹாதிஹிஸ் ஸனதி லில்லாஹி தஆலா.

## செய்தித் திரட்டு

### விண்ணப்ப திகதி நீடிப்பு

கோப்பாய் மார்ச் 31

யாழ் மாவட்ட தொலைக்கல்வி பிரிவில் பயிற்சி பெற விரும்பும ஆசிரியர்கள் விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம இம மாதம 5 ஆம திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது—

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி விண்ணப்பம தொடர்பான அறிவித்தல் யாழ் மாவட்டத்திற்கு கிடைப்பதில் தாமதம ஏற்பட்டதை அடுத்து விண்ணப்ப திகதி ஏப்ரல் 05 ஆம திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது—

(ஐ—142)

### அஹதியா தொழிற்பயிற்சி

அக்மீமன மார்ச் 31

காலி – கிந்தோட்டை அஹதியா இயக்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள முஸ்லிம இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பயிற்சித் திட்டம், இவ்வட்டாரத்தில் வதியும முஸ்லிமகளின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும அரியதொரு சமூகப் பணியாகும— என பொதுமக்கள் பாராட்டுகின்றனர்—

(ஐ—034)

### சனநெரிசல

காலி மார்ச் 31

காலி மத்திய பஸ் நிலையத்தில் இருந்து "கிந்தோட்டை" ஊடாக மமால்லிகொட வரை யில் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் வான்களில் குறிப்பிட்ட ஆசன எண்ணிக்கையை விட அதிகளவில் பிரயாணிகள் ஏற்றப்படுகின்றனர்—

இவ்வாகனங்களில் பயணம மேற்கொள்ளும முஸ்லிம மாதர்கள் சன நெரிசலில் சிரமப்பட வேண்டியுள்ளதாகவும புகார் கூறப்படுகிறது—

(ஐ—034)

### நிறை குறைவு

காலி மார்ச் 31

காலி மாவட்டத்திலுள்ள பேக்

இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்திருந்த இந்திய மீனவர்களை அவர்களின் படகுகளுடன் மடக்கிப் பிடித்து வைத்திருந்தார்கள்.

இந்த விளக்கத்தைத்தான் விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் மு கருணாநிதி தொலைபேசியில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேசி இந்திய மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

புலிகளுடன் பல தடவைகள் பேசிப் பழக்கப்பட்ட அமைச்சர் ஏ சி எஸ் ஹமீததான் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இம்முறையும் புலிகளுடன் பேசினார். வழக்கம் போலப் பேச்சு வெற்றி அளித்தது. இந்திய மீனவர்களைப் புலிகள் விடுவித்தார்கள்.

இந்திய மீனவர்களைப் புலிகள் பிடித்து வைத்திருந்தது சரியா, பிழையா என்பது வேறு விஷயம். ஆனால் இதிலிருந்து பல உண்மைகள் புலனாகின்றன.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே மிகுந்த புரிந்துணர்வும் ஆழமான நல்லெண்ணமும் இருப்பது தெரிகிறது.

வெளியார் தலையீடின்றி எமக்குள்ளேயே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் சரியான முறையில் பேசி எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கண்டு விடலாம் என்பதும் தெளிவாகிறது.

அரசினரும் புலிகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் அனைத்திற்கும் சுமுகமான முறையில் தீர்வு காண்பர் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாகவும் இது அமைகிறது.

---

...ச் சிறார்கள் வீதிகளில் புத்தகப் பைகளைச் சுமந்தவாறே அழுது ...

...யெல்லாம் பணம் வசூலிக்கிறார்களா ஆசிரியர்கள்–

---

ஊ. சே. நிதி

# விண்ணப்ப படிவம் பெறுவதில் தோட்ட தொழிலாளர் சிரமம்

அட்டன் மார்ச் 31

ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப் படிவத்தைப் பெற அட்டன் உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகம் வரும் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தொழிற்சங்க வட்டாரங்கள் புகார் தெரிவிக்கின்றன–

பிரதி வியாழக்கிழமை தோறும் ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப் படிவங்கள் மேற்படி காரியாலயத்தில் விநியோகிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது–

ஆனால் பல சந்தர்ப்பங்களில் மேற்கூறப்பட்ட தினத்தில் ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப் படிவத்தைப் பெற மேற்படி காரியாலயம் வரும் தொழிலாளர்கள் விண்ணப்பப் படிவம் கிடைக்காமல் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப நேரிடுகிறது–

குறிப்பிட்ட வியாழன் அன்று உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்துக்கு சமூகம் தராவிடில் மேற்படி விண்ணப்பப் படிவம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை–

இன்னும் பல சமயங்களில் விண்ணப்பப் படிவம் முடிந்து விட்டதாகக் கூறி தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்–

எனவே தொழிலாளர்களின் நலன் கருதி ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப்படிவங்களை தோட்டங்களிலேயே விநியோகிக்கும்படி தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்–

(ஐ–096).

---

## புதிய தமிழ் வித்தியாலயம்

கிண்ணியா மார்ச் 31

கிண்ணியா ஆஸ்பத்திரி வீதி மூன்றாம் வட்டாரத்தில் காசிம் நகர் என்ற பெயரில் புதிய தமிழ் வித்தியாலயம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது–

திருகோணமலை மாவட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் திரு தே. தியாகராசா இவ் வித்தியாலயத்தை திறந்து வைத்தார்–

கிண்ணியா இந்து இளைஞர் (வை எம் எச் ஏ) மன்றத்தின் வேண்டுகோளின் பேரிலேயே திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் மன்றத்தின் நிதி ஒதுக்கீட்டில் இவ்வித்தியாலயம் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது–

(ஐ–151).

---

[illegible] படையில் கொடுப்பதற்கு உத்தேசித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஏன் இவ் ஆசிரியர்கள் சட்டவிரோதமாக சில வரி அறவீடுகளை அரசுக்குத் தெரியாமலே வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள்– இவ்வாறு அறவிடப்படும் பணத்திற்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்–

இது குறித்து இப்பகுதி வாழ் பெற்றோர்களும் மாணவர்களும் பெரிதும் கவலையடைந்துள்ளனர்–

எனவே தயவு செய்து உரிய உயர் அதிகாரிகள் உடன் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி இதற்கொரு தீர்வு காணுமாறு இப்பகுதி வாழ் பொது மக்கள் சார்பாக நான் உங்களை மிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்–

என் பாறூ,
நிந்தவூர்–11 (கி ம)

---

அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்–

ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை–

எனினும் உங்களில் எவன் மிக பயபக்தி உடையவனாக இருக்கிறானோ அவன்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான்–

நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) நன்கறிந்தவனாகவும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான்–

(அல்குர்ஆன் அத் 49 வசனம் 13)

எமது வாழ்வு இறைபக்தி மிக்கதாக இருக்க வேண்டும். அல்லாஹ் மிகப் பயபக்தி உடையவர்களையே மிக்க கண்ணியம் வாய்ந்தவர்களாகக் கொள்வதாக அல்குர்ஆன் கூறு...

பல் ஆலமீன்!!!

* நோன்பின் நிய்யத்து

நவைத்து செளமகதின் அன் அதாயி பர்ழி ரமழானி ஹாதிஹிஸ் ஸனதி லில்லாஹி தஆலா.

அல்லாஹ்வுக்காக இந்த வருடத்தின் ரமழான் மாதத்தின் பர்ளான நோன்பை அதாவாக நாளைப் பிடிக்க நிய்யத்து செய்கிறேன்–

* நோன்பு திறக்கும் துஆ

அல்லாஹும்ம லகஸும்து வபிக ஆமன்து வஅலைக்க தவக்கல்து வஅலா ரிஸ்கிக அப்தர்து பதகப்பல் மின்னீ–

அல்லாஹ்வே உனக்காகவே நோன்பு நோற்றேன்– உன்னையே விசுவாசித்தேன்– உன் மீதே என் காரியங்களைச் சாட்டினேன்–

உனது உணவினால் நோன்பு திறந்தேன்– ஆகவே என் நோன்பை ஏற்றுக் கொள்வாயாக!

— எப் எம் பைரூஸ் —

---

# புனித அல்குர்ஆன் சாந்தி சமாதானத்தை போதிக்கிறது

## அரபுக் கல்லூரி அதிபர்

புத்தளம், மார்ச்– 31

"முஸ்லிம்கள் அமைதியையும் சமாதானத்தையுமே என்றும் விரும்புகின்றார்கள் புனித அல்குர்ஆனும் சாந்தியையும் சமாதானத்தையுமே போதிக்கின்றது"

புத்தளம் அல் மதரசத்துல் காசிமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி அப்துல்லாஹ் மஹ்மூது ஆலிம் (காசிமி, மதனி) மேற்கண்டவாறு தெரிவித்தார்–

அல் மதரசத்துல் காசிமிய்யாவின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது–

பரீட்சையில் தேறியவர்களுக்கும், சிறந்த மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன–

மௌலவி எஹியா ஆலிம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கல்லூரி அதிபர் மௌலவி அப்துல்லாஹ் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:–

"எம் மக்களுக்கு சிறந்த தொரு வாழ்க்கை முறையையும் அரசியல் சித்தாந்தங்களையும், நல் முறை தத்துவங்களையும் புனித அல்குர்ஆனும் ஹதீஸும் விளக்கிக் காட்டுகின்றன–

இதன் மூலம் முஸ்லிம் அல்லாதவர்களையும் இஸ்லாத்தின் பால் அழைக்க வேண்டும்–

மனித சமுதாயம் எப்படி வாழ வேண்டும், எப்படி தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை உலமாக்கள் முன்மாதிரியாய் இருந்து காட்ட வேண்டும்–

அப்படிப்பட்ட சிறந்த உலமாக்களை உருவாக்கும் பொறுப்பு இப்படிப்பட்ட அரபுக் கலாசாலைகளுக்கே உண்டு–

இப்படிப்பட்ட கலாசாலைகளில் கட்சி பேதங்களுக்கு ஒரு போதும் இடம் கிடையாது"

இவ்வாறு அவர் கூறினார்–

கல்லூரியின் நம்பிக்கை பொறுப்பாளர் ஜனாப் ஏ எஸ் எம் முகம்மது காசிம் மரைக்கார் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்– (ஐ–241).

---

## நிறை குறைவு

காலி மார்ச் 31

காலி மாவட்டத்திலுள்ள பேக்கரி உரிமையாளர்களில் பலர் நிறை குறைந்த பாணை விற்பதன் மூலம் நீண்ட காலமாகப் பாவனையாளர்களை ஏமாற்றி வருகின்றனர்–

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இது விடயமாக உரிய நடவடிக்கை எடுப்பதில்லையெனவும் பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்–

(ஐ–034).

## புது வருட பொன் விழா

சித்தன்கேணி மார்ச் 31

அராலி மேற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையப் "பொன் விழா" எதிர்வரும் தமிழ்ப் புதுவருடப் பிறப்புத் தினத்தன்று வெகு கோலாகலமாக நடைபெறவுள்ளது–

இவ்விழாவை முன்னிட்டு அராலி மேற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தினர் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையே மாபெரும் நாடகப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளனர்–

புத்தாண்டுத் தினத்தன்று இரவு நடைபெறும் "பொன்விழா"வில் கலை நிகழ்ச்சிகளும், பரிசளிப்பும் நடைபெறுவதோடு "பொன்விழா" மலர் ஒன்றும் விசேட நிகழ்ச்சியாக வெளியிடப்படவுள்ளது–

(ஐ–283).

# சமரச இணக்கத்துக்கு லிதுவேனியா விருப்பம்

## ஜனாதிபதி கொர்பச்சேவின் எச்சரிக்கையை அடுத்து அறிகுறி

மாஸ்கோ, ஏப் 1

ரஷ்யாவில் சுதந்திரப் பிரகடனம் செய்திருக்கும் லிதுவேனிய குடியரசுத் தலைவர்கள் மத்திய அரசுடன் சமரச இணக்கத்துக்கு விருப்பம் தெரிவித்திருக்கின்றனர். ஜனாதிபதி கொர்பச்சேவின் கடுமையான எச்சரிக்கையை அடுத்தே, அவர்கள் இணக்கத்துக்கான அறிகுறிகளை தென்படுத்தியிருக்கின்றனர்.

லிதுவேனியக் குடியரசின் தன்னிச்சையான சுதந்திரப் பிரகடனம பாரதூரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும என ஜனாதிபதி மிக்கையில் கொர்பச்சேவ் எச்சரிக்கை விடுத்தார் அல்லவா?

அந்த எச்சரிக்கையை அடுத்து லிதுவேனியத் தலைவர் வைடோடஸ் லான்ட்ஸ்பேர்கிஸ் கருத்து தெரிவித்திருக்கிறார்- அவர் கூறியிருப்பதாவது—

பிரிவினைவாத லிதுவேனிய அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமபடி மேற்கு ஐரோப்பிய நாடுகள் கோரிவருகின்றன-

இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி கொர்பச்சேவ் அலட்சியப்படுத்தி வருகிறார்-

நாம் அடிக்கடி இணக்கத்திற்கு விருப்பம தெரிவித்தோம, ஆனால் அது நிராகரிக்கப்பட்டு வந்திருக்கிறது-

தற்போது கொர்பச்சேவ் இதனை மிகவும தீவிரமாக கடுமையான வார்த்தைகள் மூலம நிராகரித்திருக்கிறார்-

— இப்படி அவர் தெரிவித்தார்-

ஆயினும அவர் கடந்த மார்ச் மாதம 11ஆம திகதிய சுதந்திரப் பிரகடனத்தை வாபஸ் பெற வேண்டும என்ற ஜனாதிபதி கொர்பச்சேவின் கோரிக்கை குறித்து கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டார்!

லிதுவேனிய நாடாளுமன்றம இன்று திங்கட்கிழமை கூடுகிறது- நாடாளுமன்றக் கூட்டத்தில் ஒரு சமரச இணக்கத்திற்கான பிரேரணை ஒன்று கொண்டு வரப்படலாம என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

ஆயினும சுதந்திரப் பிரகடனத்தை வாபஸ்பெற முடியாது என்றும அவர் சொன்னார்-

இதேவேளை கடந்த சனிக்கிழமை உக்ரைன் ஜோர்ஜியா ஆகிய மாநிலங்களிலும் மாஸ்கோவிலும லிதுவேனியாவின் சுதந்திரக் கோரிக்கைக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன-

[ண]

## லிபரல் கட்சி ரஷ்யாவில் உதயம்

மாஸ்கோ, ஏப் 1

ரஷ்யாவில் கடந்த சனிக்கிழமை லிபரல் கட்சி ஆரமபிக்கப்பட்டது.

ரஷ்யாவின் வரலாற்றில் கமயூனிஸ்ட் கட்சிக்கு புறமபாக புதியதொரு கட்சி உருவாகியிருப்பது இதுவே முதல் தடவையாகும.

நவ லிபரல் ஜனநாயக கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ரஷ்யாவின் மொத்தமுள்ள 15 குடியரசுகளில் 10 குடியரசு...

கமயூனிஸ்ட் கட்சி ஏகபோகத்திற்கு பதிலாக பல அரசியல் கட்சி முறைக்கான உத்தரவாதம கடந்த மார்ச் மாதம அரசமைப்பு திருத்தம மூலம அளிக்கப்பட்டிருக்கிறது. (ண)

### 10 பேர் பலி

புதுடில்லி, ஏப் 1

புதுடில்லிக்கு அருகே கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த மண்...

## 10 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

புதுடில்லி, ஏப்

பாகிஸ்தானில் இருந்து இந்திய எல்லையைக் கடந்து வரமுயன்ற 10 காஷ்மீர் தீவிரவாதிகளை இந்தியப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

இச்செய்தியை இந்திய செய்தி ஸ்தாபனங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டன.

எல்லையைக் கடந்து வந்தவர்கள் இந்தியப் படையினரின் உத்தரவுக்கு கீழ்படியாமல் தப்பி ஓட முயன்றனர் என்றும எனவே தான் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது,

நாசகாரர்கள் என்று கூறப்படும 12 பேரைப் படையினர் கைது செய்தனர்.

(ண)



### பொருளாதார கட்டுப்பாடு நீக்கம்; விலையும் ஏற்றம்

கானாவில் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. இதனால் சந்தையில் கொள்ளை கொள்ளையாகப் பொருட்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம இல்லாமல் போய் விட்டது, ஆனால் பொருட்களின் விலை மட்டும வானளாவ உயர்ந்து விட்டது, கடைகளிலே பொருட்கள் இருந்தும கைகளிலே பணம இல்லையே என்று சாதாரண மக்கள் அங்கலாய்க்கிறார்கள். (ண)

## சர்ச்சைக்குரிய நூலினால் எகிப்திய எழுத்தாளர் கைது

## இன்டர்போலில் சேர கம்யூ. ரஷ்யா திட்டம்

மாஸ்கோ, ஏப் 1 ... கிழமை வெளியிட்டது,

